(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.5/2023 |
| Deposition Of Witness for | : | PW2 |
| Name | : | **Thiru.Hakkim** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04th September 2025.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது கருங்காலங்குடி, கீழத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நானும் எனது அண்ணனும் வெளிநாட்டில் வசித்து வேலை செய்து வருகிறோம். கடந்த 2012-ம் ஆண்டு நான் குவைத் நாட்டில் வேலைப் பார்த்துவிட்டு என் சொந்த ஊருக்கு வந்துவிட்டேன். நானும்

எனது அண்ணனும் வெளிநாட்டில் வேலைபார்த்த சம்பாதித்த பணத்தை வைத்து பொதுவாக இருவருக்கும் பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது அண்ணன் பெயரிலும், எனது தந்தையார் பெயரிலும் வாங்கினேன். அந்த சொத்தில் சிங்கம்புணரியில் அதிசயம் Shoping center என்ற ஒரு கடையை 2016–ம் ஆண்டு ஆரம்பித்தேன். அந்த கடை ஆரம்பித்த பின்பு எனக்கும் எனது அண்ணனுக்கும் ஒரு பிரச்சினை ஏற்பட்டது.

2. எனக்கும்ம் எனது அண்ணனுக்கும் ஏற்பட்ட சொத்து தகறாறு சம்பந்தமாக மதுரை 4வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோம். வழக்கும் நிலுவையில் இருக்கும்போது ஊர் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அதன் அடிப்படையில் நான் தாக்கல் செய்திருந்த சிவில் வழக்கை வாபஸ் பெற்றேன். பின்பு நான் வழக்கை வாபஸ் வாங்கிய பிறகு சொன்னதுபோல் நடந்து கொள்ளாமல் எனது அண்ணன் மதுரை குற்றப்பிரிவு போலிசிஸ் என் மீது புகார் கொடுத்தார். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை. 28 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்தேன். நான் Bail–ல் வெளியே வந்த பிறகு அதே வழக்கை காரணம் காட்டி சிவகங்கை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் என் அண்ணன் மூலமாக ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்து

என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

3. என்னை நீதிமன்றத்திற்கு உட்படுத்தினார்கள். கணம் நீதிபதி அவர்கள் எப்படி ஒரே குற்றத்திற்கு மதுரையிலும், ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் அந்த வழக்கில் நான் ஏற்கனவே சிறையில் இருந்திருந்த நிலையிலும் இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருப்பது குறித்து கேள்வி எழுப்பி அன்றைய தினமே என்னை பிணையில் விடுவித்தார். மதுரை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திலும், சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்திலும் கையொப்பம் செய்து வந்தேன். 06.08.2022 அன்று சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் நான் கையொப்பம் செய்ய வந்த போது ஆஜர் எதிரி காவல் நிலையத்தில் இருந்தபோது நான் அவரிடம் சென்று ஏற்கனவே மதுரையிலும் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது, இங்கு சிவகங்கையிலும் வந்து நான் வழக்கிற்காக கையொப்பம் செய்து வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் இப்போது தான் நான் விடுமுறையில் சென்று வந்ததாகவும், தற்சமயம் சென்று விட்டு மாலை வருமாறு என்னிடம் கோபமாக கூறினார்.

4. நானும் அன்றைய தினமே லஞ்ச ஒழிப்பு பிரிவு சிவகங்கை

அலுவலகத்திற்கு சென்று நடந்த விபரத்தை கூறினேன். அங்கிருந்த காவலர்கள் என்னிடம் புகார் எழுதிவிட்டு பணம் ரூ.20000/- கொடுக்கும்படி கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரை நான் எழுதவில்லை. அங்கிருந்த காவலர் ஒருவர் எழுதினார். நான் அதில் கையொப்பம் மட்டும் செய்தேன். **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுத்தபோது என்னிடம் பணம் இல்லாததால் என் அண்ணனிடம் வாங்கி லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் கொடுத்தேன். போலிஸ் தரப்பில் அந்த பணத்தை என்னிடம் மீண்டும் கொடுத்து விட்டு என்னுடன் ஒரு நபர் வருவார் என்றும் அவருடன் சென்று ரூ.20000/- ஐ ஆஜர் எதிரி இராமகிருஷ்ணனிடம் சேர்த்துவிடுமாறும் கூறினார்கள்.

5. என்னிடம் காண்பிக்கப்படும் **முதல் தகவல் அறிக்கையில் Column எண்.14 ல் உள்ள** கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த புகாருக்காக கையொப்பம் செய்ய சொல்கிறார்கள் என்று நினைத்து கையொப்பம் இட்டேன். நானும் என்னுடன் லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் அனுப்பிய ஒரு நபரும் சேர்ந்து சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல்

நிலையத்திற்கு சென்றோம். அங்கு சென்று எதிரி இராமகிருஷ்ணன் இருக்கிறாரா என்று ஒரு பெண் காவலரிடம் கேட்டேன். அப்போது மாலை மணி ஞாபகமில்லை. அந்த பெண் காவலர் எதிரி இராமகிருஷ்ணன் காவல் நிலையத்தில் இல்லை என்றும் வெளியே சென்று விட்டார் என்றும் சொன்னார். நான் அந்த தகவலை என்னுடன் வந்த நபரிடம் கூறினேன். அவர் வெளியே காத்திருந்த லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் சொல்வதற்காக வெளியே சென்றார். நான் எதிரி இராமகிருஷ்ணனின் மேஜை டிராயரில் அந்த பணம் ரூ.20000/–ஐ போட்டு விட்டு வெளியே வந்து விட்டேன். வெளியே வந்த போது எதிரி இராமகிருஷ்ணனும், மற்றொரு நபரும் காரில் வந்து இறங்கினார்கள். அவர் என்னிடம் கையொப்பம் போட வந்தாயா என்று கேட்டார். நான் அவர் கையை பிடித்து இந்த வழக்கை எப்படியாவது Mistake of Fact என முடித்துக் கொடுங்கள் என்று கேட்டேன். அப்போது வெளியே நின்று கொண்டிருந்த லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசார் நானும் எதிரி இராமகிருஷ்ணனும் பேசிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து எங்களை சுற்றி நின்றனர்.

6. போலிசார் சைகையில் என்னிடம் பணம் ரூ.20000/– எங்கே என்று கேட்டனர். நான் அந்த டிராவில் வைத்துவிட்டதாக சைகையில்

சொன்னேன். என்னை அங்கிருந்து கிளம்புமாறு கூறினார்கள். நானும் கிளம்பி வந்துவிட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்படைப்புமகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால் 3 வது கையொப்பம் என்னுடையதுதான். **ஒப்படைப்பு மகஜரில் உள்ள 3 பக்கங்களிலும் உள்ள 3 வது கையொப்பம் அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் ரூ.500/- நோட்டுக்கள் (40 எண்ணம்) ஆக மொத்தம் ரூ.20000/- ஐ நான்தான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் அதிகாரியிடம் கொடுத்தேன். அந்த **பணம் ரூ.20000/- அ.த.சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>நீதிமன்ற கேள்வி:</u>**

என்ன காரணத்திற்காக சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் புகார் கொடுக்கச் சென்றேன் என்றால் சிவில் வழக்கிற்காக என் அண்ணனிடம் பணம் பெற்றுக் கொண்டு ஒரே குற்றத்திற்காக என் மீது 2 வது முறையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பதாக புகார் கொடுக்கச் சென்றேன்.

**<u>சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரிய அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 மற்றும் 145ன் கீழ் அரசு தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான்தான் எழுதினேன் என்றால் இல்லை. அங்குள்ள நபர் எழுதினார் அதில் கையொப்பம் மட்டும் தான் செய்தார். புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை நான்தான் சொன்னேன் என்றால் இல்லை. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் 7ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கும் எனது அண்ணனுக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட சொத்து தொடர்பாக எனது அண்ணன் சொத்தை நான் அபகரிக்க முயற்சி செய்த காரணத்தினால் என் அண்ணன் சார்பாக அவரது power agent கொடுத்த புகாரின்பேரில்தான் மதுரை மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என் அண்ணனின் புகாரின் அடிப்படையில் என் அண்ணன் சொத்துக்களை மோசடி செய்து அபகரிக்க முயற்சி செய்த காரணத்தினால் தான் சிவகங்கை குற்றப்பிரிவு காவல் நிலையத்திலும் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி இரண்டு வழக்குகளிலும் என் மீது குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரியுமா என்றால் சரிதான். பொதுவாக, லஞ்சம் கேட்டால் தான் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் புகார் கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் ஆமாம். பல லட்சம், பல கோடி மதிப்புள்ள சொத்துக்களை பதிவு செய்து எவ்வாறு நிர்வாகம் செய்ய வேண்டும், எந்த ஆவணங்களில் கையொப்பம் செய்ய வேண்டும், செய்ய கூடாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் நல்லா படித்தவர், விபரம் தெரிந்தவர் என்பதால் ஆவணங்களை படித்துப்பார்க்காமல் நான் கையொப்பம் செய்ய மாட்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன விபரங்களை தான் புகாரில் எழுதினார்கள் என்றாலும் என் மீது சிவகங்கை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்ததை Mistake of Fact என முடித்து தருவதாக எதிரி என்னிடம் கூறினார், அதன் காரணமாகத்தான் எதிரி என்னிடம் ரூ.20000/- லஞ்ச பணம் கேட்டார் என்றால் சரியல்ல.

2. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரிந்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பல லட்சம் மதிப்புள்ள சொத்துக்களை நிர்வாகம் செய்யும் நான், பொதுவாக அனைத்து

ஆவணங்களையும் படித்து பார்த்து கையொப்பம் செய்யும் விபரம் தெரிந்த நபராகிய நான், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலிசாரிடம் லஞ்ச பணம் கேட்டால்தான் புகார் செய்ய வேண்டும் என்ற விபரம் தெரிந்த நான், என்ன காரணத்திற்காக புகாரை படித்துப் பார்க்காமல் கையொப்பம் செய்தேன் என்றால் என் மீது ஒரே குற்றத்திற்காக இரண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்த காரணத்தினால்தான் என் அண்ணனிடம் பணம் பெற்றுக் கொண்டு எதிரி இராமகிருஷ்ணன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார் என்ற கோபத்தில்தான் புகார் கொடுக்கச் சென்றேன். புகாரில் என்னை கையொப்பம் செய்ய சொன்ன நபர் யார் என்றால் தற்சமயம் தெரியவில்லை. நீதிமன்றத்திலோ, போலிஸ் உயர் அதிகாரிகளிடமோ புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாமல் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசார் சொன்னதன் பேரில் கையொப்பம் செய்தேன் என்ற தகவலை சொன்னேனா என்றால் இல்லை.

3. எதிரி இராமகிருஷ்ணன் என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டார் என்ற கோபத்தில் அவரை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் லஞ்சம் கேட்காத நபர் மீது லஞ்ச ஒழிப்பு துறைக்கு புகார் கொடுக்க சென்ற காரணம் என்ன என்றால் என் அண்ணனிடம்

பணம் பெற்றுக்கொண்டுதான் என் மீது முதல் தகவல் அறிக்கைகை எதிரி இராமகிருஷ்ணன் பதிவு செய்துவிட்டார் என்ற காரணத்தினால்தான் புகார் கொடுத்தேன். என் அண்ணனிடம் பணம் பெற்றுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன். நான் உண்மையை மறைத்து உண்மைக்குமாறாக பொய் சொல்கிறேன் என்றாலும், எதிரி என்னிடம் லஞ்சப்பணம் ரூ.20000/-ஐ முதன் முறையாக கடந்த 29.07.2022 அன்று மதியம் 12.00 மணியளவில் முதல் தகவல் அறிக்கையை முடிப்பதற்காக ரூ.20000/- கேட்டார் என்றும் மீண்டும் 06.08.2022 அன்று 11.30 மணியளவில் ஏற்கனவே கேட்ட லஞ்ச பணம் ரூ.20000/- ஐ கேட்டார் என்றும் லஞ்சப்பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடம் கடந்த 06.08.2022 அன்றே நடந்த விபரங்களை சொல்லி புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. புகாரை எனக்கு தெரியாத நபர்தான் எழுதினார் என்றால் ஆமாம். எனக்கு தெரியாத நபர் எனது சொத்துக்கள் சம்பந்தமாகவும் என் மேல் உள்ள வழக்கு சம்பந்தமாகவும் என் அண்ணன் தம்பி தகறாறு சம்பந்தமாக புகாரில் குறிப்பிட்டிருந்தது எவ்வாறு என்றால்

மதுரையில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை அவரிடம் கொடுத்தேன். அதை வைத்துதான் புகாரை எழுதினார். ஊர் பெயர் தெரியாத நபரிடம் மதுரை மத்திய குற்றப்பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. புகாரில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து அறிமுகம் இல்லாத 3ம் நபருக்கு தெரியாது என்றாலும் அதில் எனது சொத்து சம்பந்தமாக அண்ணன், தம்பி தகறாறு குறித்து எந்த ஒரு நபரும் ஊர் பெயர் தெரியாத நபரிடம் தெரிவிக்கமாட்டார் என்றால் லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசார் என்ற அடிப்படையில்தான் சொன்னேன். நான் சொல்வதுபோது லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் நான் கூறவில்லை என்றும் அதனால்தான் எத்தனை முறை கேட்டாலும் அது எந்த போலிசார் என்னால் கூற இயலவில்லை என்றாலும் அடையாளம் காட்ட முடியாது என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன சங்கதிகளின் அடிப்படையில்தான் புகார் எழுதப்பட்டு அதை நான் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

5. 06.08.2022 அன்று மாலை 05.05 மணிக்கு சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் நானும், மற்றொரு அரசு சாட்சி பார்த்திபன் என்பவரும் சென்ற போது காவல் நிலையத்தில் பணியில் நிறைய போலிசார்கள் இருந்தார்கள் என்றால் இல்லை. ஒரு பெண் காவலர் மட்டும் தான் இருந்தார். அன்றைய தினம் நிறைய போலிசார் பணியில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் மேஜை டிராயரில் பணம் ரூ.20000/- என்ன காரணத்திற்காக வைத்தேன் என்றால் போலிசார் சொன்னதன் அடிப்படையில் வைத்தேன். லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் என்ன காரணத்திற்காக என்னிடம் லஞ்சப்பணம் கேட்காத காவல் ஆய்வாளரின் மேஜை டிராயரில் ரூ.20000/- வைக்கச் சொல்கிறீர்கள் என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் சொல்வதுபோல் காவல் ஆய்வாளரிடம் மேஜை டிராயரில் ரூ.20000/- வைக்கவில்லை என்றாலும் நடந்த உண்மை சம்பங்களை மறைத்து எதிரியை காப்பாற்றும் நோக்கோடு எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 29.07.2022ம் தேதி நான் போலிசாரிடம் நான் சிவகங்கை

குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ய வந்தபோது மதியம் 12.00 மணியளவில் எதிரி இராமகிருஷ்ணனை சந்தித்ததாகவும் ஒரே குற்றத்திற்கு மதுரையிலும், சிவகங்கையிலும் வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், தினமும் மதுரையிலும், சிவகங்கையிலும் கையொப்பம் செய்வதாகவும் அதற்கு காவல் ஆய்வாளர் ரூ.20000/- பணத்தை என்னிடம் கொடு சிவகங்கையில் போடப்பட்ட வழக்கை Action drop செய்கிறேன் என்று சொன்னதாக போலிசாரிடம் சொல்லிவிட்டு தற்போது சொல்லவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. 06.08.2022 அன்று சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளர் என்னிடம் ஏற்கனவே கேட்ட லஞ்ச பணம் ரூ.20000/-ஐ கேட்டதாகவும் போலிசாரிடம் வாக்குமூலம் சொல்லியுள்ளீர் என்றால் சரியல்ல. உண்மை சங்கதிகளை மறைத்து போலிசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கு முரணாக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்த சம்பவம் குறித்து தான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவலரிடம் புகார் கொடுத்தேன் என்றாலும் புகாரை படித்துப் பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. உண்மை சங்கதிகளை புகாராக

கொடுத்துவிட்டு தற்போது பொய் சங்கதிகள்குறித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பது உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. 06.08.2022 அன்று மதியம் 3.15 முதல் 4.00 மணி வரை சிவகங்கை ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் சொன்னதன் அடிப்படையில் அங்கு நடந்த விபரங்களை ஒப்படைப்பு மகஜராக தயார் செய்ததாகவும் அந்த ஒப்படைப்பு மகஜரில் எதிரி கேட்ட லஞ்ச பணம் ரூ.20000/- ஆஜர் செய்ததாகவும், அந்த ரூபாய் நோட்டுகளின் Serial எண்களை குறித்துக் கொண்டதாகவும், இரண்டு அரசு சாட்சிகள் பொறிவைப்பு நடவடிக்கைக்கு சாட்சியாக வந்ததாகவும், என்னிடமும், அரசு தரப்பு சாட்சிகள் இருவரிடம் பினாப்தலீன் மற்றும் சோடியம் கார்பனேட் சோதனையின் முக்கியத்துவம் குறித்து உணர்த்தியதாகவும், அதற்கு பின் சோதனையின்போது ரூ.20000/-(500x40) நோட்டுக்களின் இருபுறமும் ஆய்வாளர் சொல்ல பினாப்தலீன் பவுடரை தடவப்பட்டு அந்த நோட்டுக்கள் காவலர் மூலமாக அரசு சாட்சி எனது சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்ததாகவும், என்னுடம் அரசு சாட்சி பார்த்திபன் என்பவர் எதிரியின் அலுவலகத்திற்கு செல்லுமாறும், அங்கு நடக்கும் விபரங்களை உன்னிப்பாக கவனிக்குமாறு சொன்னதாகவும், எதிரி லஞ்சப்பணம் கேட்டுப் பெற்றால் நாங்கள் கூறிய

சைகையை செய்து காட்டும்படி கூறியதாகவும் ஒப்படைப்பு மகஜரில் மேற்கண்ட அனைத்து விபரங்களும் பதிவு செய்யப்பட்டதாகவும், அதில் நானும், அரசு சாட்சிகளும் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றாலும், அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு தற்சமயம் அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. 06.08.2022 அன்று மாலை 4.45 மணிக்கு நானும் இரண்டு அரசு சாட்சிகள், காவல் ஆய்வாளர் மற்றும் போலிஸ் குழுவினர் எதிரியின் அலுவலகத்திற்கு முன்பு மாலை சுமார் 5.00 மணிக்கு சென்றதாகவும், அங்குள்ள மாரியம்மன் கோவில் அருகே போலிஸ் ஜீப்பை நிறுத்தியதாகவும், அப்போது மீண்டும் காவல் ஆய்வாளர் எனக்கும் அரசு சாட்சி பார்த்திபன் என்பவருக்கும் மீண்டும் ஒருமுறை அறிவுரைகளை ஞாபகப்படுத்தி எதிரியின் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லி விட்டு தற்சமயம் அது குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் மற்றும் மற்றொரு அரசு சாட்சி மற்றும் போலிஸ் குழுவினர் அந்த அலுவலகத்தின் மேற்குபுறமாக இருந்து நடக்கும் சம்பவங்களை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்ததாகவும், அங்கிருந்த உதவி

ஆய்வாளர் வசந்தி என்பவர் எதிரி அலுவலகத்தில் இல்லை என்றும் மாலை 5.00 மணிக்கு வருவார் என்று சொன்னதாகவும், எந்த சைகையும் காட்டாமல் நானும் அரசு சாட்சியும் அலுவலகத்தினை விட்டு வந்துவிட்டதாகவும், பின்பு மாலை 5.30 மணிக்கு மீண்டும் நானும் அரசு சாட்சியும் எதிரியின் அலுவலகத்திற்கு சென்ற போது எதிரி சுமோ விக்டா என்ற நான்கு சக்கர வாகனத்தில் வந்ததாகவும், காவல் நிலையத்திற்குள்ளே சென்று வழக்கை Action drop செய்ய நான் கேட்ட தொகை ரூ.20000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டதாகவும், அதற்கு நான் பணம் ரூ.20000/- கொண்டுவந்திருப்பதாக கூறியதாகவும், பணத்தை என்னிடமிருந்து பெற்று இரண்டு கைகளால் எண்ணிப்பார்த்து மேஜை டிராயரில் வைத்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரி லஞ்சப்பணம் கேட்டுப் பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாக சமிக்கை செய்ததாகவும், எதிரி லஞ்சப்பணம் கேட்டுப் பெற்றுக் கொண்ட போது என்னுடன் அரசு சாட்சி பார்த்திபன் என்பவர் இருந்ததாகவும், பின்பு சமிக்சை செய்தவுடன் மேற்கண்ட விபரங்களை காவல் ஆய்வாளரிடம்

கூறியதாகவும், பிறகு நானும் மற்றொரு அரசு சாட்சி, காவல் ஆய்வாளர் மற்றும் போலிஸ் குழுவினருடன் அலுவலகத்திற்கு சென்றதாகவும், எதிரியை அடையாளம் காட்டியதாகவும் கூறிவிட்டு தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி லஞ்சம் கேட்காதபோது என் அண்ணனிடம் ரூ.20000/- பணத்தை வாங்கி சிவகங்கை, ஊ.த.க. பிரிவு போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்று கூறுவது உண்மைக்குபுறம்பானது என்றால் சரிதான். நான் எதிரி லஞ்சம் கேட்காதபோது ரூ.20000/- சிவகங்கை, ஊ.த.க. பிரிவு போலிசாரிடம் ஒப்படைத்தேன் என்று கூறுவது தவறானது என்றால் போலிசாரிடம் நான் ரூ.20000/- பணம் கொடுத்தேன். நான் உண்மை நிகழ்வுகளை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. மதுரை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்குதான் முதலில் பிணை பெற்றேன் என்றால் சரிதான். பிணைக்காக மனு செய்த போதே மேற்படி முதல் தகவல் அறிக்கையின் சங்கதிகளை குறித்து தெரிந்து கொண்டேன் என்றால் ஆமாம். மதுரை குற்றப் பிரிவு காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை எண்.20/2022,

நாள்.23.06.2022 என்ற வழக்கு மதுரை மாவட்ட கண்காணிப்பாளரால் Forward செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில்தான் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. அதுபோல், சிவகங்கை, குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.24/2022, நாள்.26.07.2022 அன்று பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரங்களை நான் பிணை மனு தாக்கல் செய்யும் போது தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். சிவகங்கை மாவட்ட குற்றப்பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட புகாரானது எனது உடன் பிறந்த சகோதரர் சர்க்கரை பீர் என்பவரால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. இந்த வழக்கும் சிவகங்கை மாவட்ட கண்காணிப்பாளரிமிருந்து Forward செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைதான் என்றால் சரிதான். இந்த இரண்டு வழக்கில் மதுரை வழக்கில் எத்தனை முறை கையொப்பம் செய்ய வேண்டும் என்றால் காலை மற்றும் மாலை என ஒரு நாளைக்கு இருமுறை கையொப்பம் செய்ய வேண்டும். சிவகங்கையில் பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு ஒருமுறை கையொப்பம் செய்ய உத்தரவானது என்றால் சரிதான். ஒரே

நாளில் மதுரை மற்றும் சிவகங்கை என மாறி மாறி கையொப்பம் செய்வதில் நான் மிகுந்த மன உழைச்சலுக்கு ஆளாகியிருந்தேன் என்றால் சரிதான். நான் 2 வது வழக்கை சிவகங்கையில் தாக்கல் செய்யும்போது எதிரியிடம் நான் ஏற்கனவே மதுரையில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் இங்கு முதல் தகவல் அறிக்கையை அதே காரணத்திற்காக பதிவு செய்ய வேண்டாமென கூறினேன் என்றால் ஆமாம்.

4. ஏற்கனவே நானும், எனது அண்ணனும் சேர்ந்து சம்பாதித்த பணத்தில் வாங்கிய சொத்துக்களின் ஆவணங்களில் உள்ள சங்கதிகளை நான் படித்துப்பார்க்காமல் நம்பித்தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது அண்ணனிடம் லஞ்சமாக பணம் வாங்கி கொண்டு என் மீது 2 வது முறையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட காரணத்தினால்தான் நான் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். நான் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்தில் எனது அண்ணனிடம் லஞ்சமாக பணம் வாங்கி கொண்டு என் மீது 2 வது முறையாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற விபரத்தை கூறினேனா என்றால் ஆமாம். நான் புகாரை படித்துப் பார்க்காமல் தான் கடைசி பக்கத்தில் கையொப்பம் செய்தேன் என்றால்

ஆமாம். நான் அரசு தரப்பு சாட்சிகளிடம் எதுவும் பேசவில்லை என்றால் ஆமாம். என்னுடன் வந்த நபரிடம் போலிசார் என்ன சொல்லி அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

5. சிவகங்கை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் வெளியில் உள்ள போர்ட்டிகோவிற்கு அடுத்ததாக உள்ளே நுழைந்தால் வலது பக்கம் உள்ள அறைதான் எதிரியின் அறை என்றால் சரிதான். அந்த அறை சுமார் 10 X 10 அளவு இருக்குமா என்றால் ஆமாம். அந்த அறையில் வடக்கு திசையைப் பார்த்து சுவர் ஓரமாக போடப்பட்டிருக்கும் நாற்காலிதான் ஆய்வாளருக்கான இடம் என்றால் சரிதான். அந்த அறையின் உள்ளே நுழைந்தவுடன் நேர் எதிரி மற்றொரு மேஜையும், நாற்காலியும் உள்ளது என்றால் ஆமாம். போர்ட்டிகோவிலிருந்து எதிரி அறையின் வாசலில் நின்று கொண்டு உள்ளே பார்த்தால் எதிரி அமர்ந்திருக்கும் இடத்தில் என்ன நடக்கிறது என்று விபரம் தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் செய்வதற்கு பல முறை அந்த அறைக்குள் ஆய்வாளரின் இருக்கை இருக்கும் இடத்தில் உள்ள மேஜையில் வைத்துதான் கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆய்வாளர் விடுப்பில் சென்றிருந்த சமயத்திலும் அங்கு சென்றுதான் ஆய்வாளர் மேஜையில் வலது புறம்

டிராயரில் உள்ள நோட்டை எடுத்து நான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். அந்த மேஜை சுமார் 1 1/2 அடி அளவு அகலம் இருக்குமா என்றால் சரிதான்.

6. சம்பவம் நாளன்றும் நான் நோட்டில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம். நான் அன்றைய தினம் மாலை அலுவலகத்திற்கு சென்றபோது வசந்தி என்ற காவலர் Condition கையொப்பம் போட வந்துள்ளாயா என கேட்டுக் கொண்டே அவரது அறைக்கு அவர் சென்று விட்டார் என்றால் சரிதான். ஒப்படைப்பு மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாமல்தான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் கையொப்பம் போடும் போது அதில் வேறு யாரது கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடமிருந்து பணம் ரூ.20000/-ஐ பெற்று நான் தான் எனது சட்டைப் பாக்கெட்டில் வைத்தேன் என்றால் ஆமாம். நான் மாலை நேரத்தில் குற்றப்பிரிவு காவல் அலுவலகத்திற்கு சென்றபோது ஆய்வாளர் அங்கு இல்லை என்றால் சரிதான். அந்த நேரத்தில் நான் என்னுடன் வந்தவரிடம் காவல் ஆய்வாளர் அங்கு இல்லை என்பதை லஞ்ச ஒழிப்பு பிரிவு போலிசாரிடம் கூறுமாறு கூறினேன் என்றால் சரிதான். அதுபோல்

லஞ்ச ஒழிப்பு பிரிவு குழுவினர் நின்று கொண்டிருந்த இடம் குற்றப்பிரிவு அலுவலகத்திலிருந்து சுமார் 400 மீட்டர் தொலைவில் இருந்தனர் என்றால் சரிதான். குற்றப்பிரிவு அலுவலக வாசல் போர்ட்டிகோவிலிருந்து லஞ்ச ஒழிப்பு பிரிவு குழுவினர் நின்று கொண்டிருந்த இடம் நேரடியாக பார்த்தால் தெரியாது என்றால் சரிதான். அந்த அலுவலக கட்டிடம் இரண்டு தளங்களை கொண்டது என்றாலும் அதில் வேறு அலுவலகம் செயல்பட்டு வருகிறது என்றாலும் சரிதான்.

7. காவல் ஆய்வாளர் இல்லை என்று என்னுடன் வந்த நபரிடம் கூறிவிட்டு நான் மேஜையில் உள்ள டிராயரில் பணம் ரூ.20000/–ஐ வைத்துவிட்டு வெளியே வரும் சமயத்தில் எதிரி இராமகிருஷ்ணன் மற்றும் அவரின் டிரைவருடன் குற்றப்பிரிவு அலுவலகத்திற்குள் வந்து விட்டார் என்றால் சரிதான். அப்போது நான் எதிரியின் கையைப் பிடித்து இரண்டு இடத்திலும் வழக்கு போட்டு விட்டார்கள் கையொப்பம் செய்ய சிரமமாக இருக்கிறது என கூறினேன் என்றால் சரிதான். அவரும் நான் விடுப்பில் சென்று விட்டு இன்றுதான் பணிக்கு வந்துள்ளேன், விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக கூறினார் என்றால் சரிதான். எதிரி என்னிடம் Action drop செய்வதாக கூறி என்னிடம் லஞ்சப்பணம்

ரூ.20000/- கேட்கவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2025.09.04 18:15:31 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.